**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் :141/மா/2023**
**நாள் : 27/09/2023**

திரு.V.P.ரவிச்சந்திரன்,
திருப்பூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர் – எதிர்மனுதாரர்

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P.ரவிச்சந்திரன் என்பவரின் 25.04.2023 நாளிட்ட மனு 02.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 141/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P.ரவிச்சந்திரன் என்பவர் தனது 25.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“ திருப்பூர் மாநகராட்சி தணிக்கை அறிக்கை முழுமையாக மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றியிருக்க வேண்டும். ஊழல் மற்றும் முறைகேட்டில் மாநகராட்சி அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு கொண்டு இருப்பதால் ஊழலும் முறைகேடுகளையும் மக்கள் தெரிந்து கொள்ள கூடாது என்ற நோக்கத்துடன் தணிக்கை அறிக்கை தலைப்புகளை மட்டும் இணையதளத்தில் பதிவேற்றி சட்டத்தையும் மக்களையும் தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டு

உள்ளார்கள். மாநகராட்சி பணியாளர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக உள்ள தணிக்கை தடைகளுக்கு எந்த விளக்கமும் அளிக்காமல் உள்ளார்கள். மாநகராட்சி நிர்வாகம் 2017–2018 மற்றும் 2018 – 2019 தணிக்கை அறிக்கைகளை எனக்கு வழங்கியதால் மாநகராட்சி அதிகாரிகள் வணிக வளாகங்களை குடியிருக்கும் வீடு என்று வரிவிதிப்பு செய்து பல கோடிகள் இழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை கண்டறிந்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் புகார் தெரிவித்தோம். எனது புகாரின் பேரில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் உரிய உத்தரவு பிறப்பித்துள்ளீர்கள்.

தொடர் குற்றங்களில் ஈடுபட்டு கொண்டிருக்கும் திரு.தங்கவேல்ராஜன், உதவி ஆணையர் அவர்கள் தனது கடிதத்தில் அவர்களுக்கு எந்தவகையிலும் தொடர்பில்லாத தகவல் ஆணைய உத்தரவை மேற்கோள்காட்டி 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளின் தணிக்கை அறிக்கையின் நகல்களை வழங்க மறுத்துள்ளார்கள். தனக்கு தொடர்பில்லாத தகவல் ஆணைய உத்தரவை மேற்கோள்காட்டி தகவலை மறுத்துள்ள திரு. தங்கவேல்ராஜன், உதவி ஆணையர் அவர்கள் தணிக்கை அறிக்கையில் உள்ள அவர் மீதான தணிக்கை தடைகளுக்கு தணிக்கை அறிக்கை பெற்றதில் இருந்து இரண்டு மாதங்களில் விளக்கம் அளித்திருக்க வேண்டும். ஆனால் ஐந்து ஆண்டுகள் முடித்தும் விளக்கம் அளிக்காமல் உள்ளார்கள்.

திரு.தங்கவேல்ராஜன் உதவி ஆணையர் அவர்கள் தணிக்கை தடைகளுக்கு விளக்கம் அளித்துவிட்டார்களா என்று கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர்களும் கடந்த ஐந்து ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2017ஆம் ஆண்டு முதல் அனைத்து ஆண்டுகளின் தணிக்கை அறிக்கைகளை முழுமையாக மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றவும், திரு.தங்கவேல்ராஜன், உதவி ஆணையர் அவர்கள் மீது உள்ள தணிக்கை தடைகளுக்கு அவர்மீது நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுத்த விபரங்களை எனக்கு தெரிவிக்க உத்தரவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 26.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

1993–94 முதல் 2020–21 நிதியாண்டு வரை துணை இயக்குநர், திருப்பூர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள தணிக்கை அறிக்கைகளின் சுருக்கங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, இணையதளத்தில் 3900 எழுத்துக்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யும் வசதி உள்ளதால், தணிக்கை அறிக்கையின் சுருக்கங்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினையும், மேலும் 1993–1994 முதல் 2020–21 நிதியாண்டு வரை பெறப்பட்டுள்ள தணிக்கை அறிக்கைகளுக்கு அவ்வப்போது நடைபெறும் தணிக்கை கூட்டமர்வில் பதில்கள் தயார் செய்து தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாநகராட்சிக்கான நகராட்சி நிர்வாக இயக்குநரக tnurbantree.tn.gov.in/tiruppur/ என்னும் இணையதள பக்கத்தில் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் tn.gov.in. இணையதளத்தில் ஆண்டுவாரியான தொகுப்பு தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், 2017–2018 மற்றும் 2018–2019 ம் ஆண்டுகளுக்கான தணிக்கைத் தடைகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு உரிய ஆவணங்களுடன் அவ்வப்போது நடைபெறும் தணிக்கைத் தடை நீக்க கூட்டமர்வுகளில் காண்பிக்கப்பட்டு தொடர்ந்து தடைநீக்கம் செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

**4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.09.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5. மனுதாரர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் தணிக்கைகள் குறித்த அறிக்கைகள் மாநகராட்சி இணையதளத்தில் மாநகராட்சியால் பதிவேற்றம் செய்யப்படுவதில்லை. இணையதளத்தில் தணிக்கை அறிக்கையின் தலைப்புகளை மட்டுமே இணையத்தில் பதிவேற்றியுள்ளனர். எனவே, தணிக்கைத் தடைகள் குறித்து இணையதளத்தில் வெளியிடவும், தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் அத்தணிக்கை அறிக்கை பத்திக்கு விரைவில் விளக்கம் அளித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6.** திருப்பூர் மாநகராட்சியின் கணக்கு அலுவலர் **13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" திருப்பூர் மாநகராட்சிக்கான நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் இணையதள பக்கத்தில் ( tnurbantree.tn.gov.in/tiruppur) தணிக்கை செய்யப்பட்ட விவரம் குறித்து முறையாக பதிவேற்றம் செய்யப்படுகிறது. அதேபோன்று உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் இணையதளத்தில் (tn.gov.in) ஆண்டுவாரியான தொகுப்பு தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநகர மென்பொருளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கொண்ட வார்த்தைகளையே (3900 words) பதிவேற்றம் செய்யப்படும் என்பதால், தணிக்கை அறிக்கையின் சுருக்கங்கள் மட்டுமே மேற்படி UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி கணக்கு அலுவலரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் தணிக்கைகள் குறித்த அறிக்கைகள் மாநகராட்சி இணையதளத்தில் மாநகராட்சியால் பதிவேற்றம் செய்யப்படுவதில்லை. இணையதளத்தில் தணிக்கை அறிக்கையின் தலைப்புகளை மட்டுமே இணையத்தில் பதிவேற்றியுள்ளனர். எனவே, தணிக்கை தடைகள் குறித்து இணையதளத்தில் வெளியிடவும், தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் அத்தணிக்கை அறிக்கை பத்திக்கு விரைவில் விளக்கம் அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் " திருப்பூர் மாநகராட்சிக்கான நகராட்சி நிர்வாக இயக்குநரக tnurbantree.tn.gov.in/tiruppur/ என்னும் இணையதள பக்கத்தில் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறையின் tn.gov.in. இணையதளத்தில் ஆண்டுவாரியான தொகுப்பு தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறையால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநரக UTIS மென்பொருளில் 3900 எழுத்துக்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யும் வசதி உள்ளதால், தணிக்கை அறிக்கையின் சுருக்கங்கள் மட்டுமே மேற்படி UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2017-18 மற்றும் 2020-21ம் ஆண்டுகளுக்கான தணிக்கைத் தடைகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு உரிய ஆவணங்களுடன் அவ்வப்போது நடைபெறும் தணிக்கைத்தடை நீக்க கூட்டமர்வுகளில் காண்பிக்கப்பட்டு தொடர்ந்து தடைநீக்கம் செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திருப்பூர் மாநகராட்சியின் கணக்கு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் இம்முறையீட்டு மனு தொடர்பாக கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- ➢ திருப்பூர் மாநகராட்சி ஆணையர் நிலுவையில் உள்ள அனைத்து தணிக்கை பத்திகளுக்கும் வருடம் வாரியாக பதில்கள் தயார் செய்து ஒரு மாதத்திற்கு கணிசமாக இலக்கு நிர்ணயம் செய்து தணிக்கை பத்திகளை நீக்கம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்.
- ➢ உள்ளாட்சி தணிக்கையை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை அவர்கள் மாதத்திற்கு ஒருமுறை கூட்டமர்வுக்கு (joint sitting) ஏற்பாடு செய்து நிலுவையில் உள்ள தணிக்கைதடைகளை உரிய காலக்கெடுவுக்குள் நீக்க உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்.
- ➢ தணிக்கை பத்திகளுக்கு உரிய விபரங்களுடன் பதிலறிக்கை தயார் செய்து அவ்வப்போது நடைபெறும் தணிக்கை கூட்டமர்வு மற்றும் உயர்மட்டக்குழு மற்றும் மாநில அளவிலான குழுவில்(joint sitting, High level committee, State Level Committee) அத்தடைகளை நீக்க தேவையான நடவடிக்கைகளை விரைந்து

மேற்கொள்ளுமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V.P.ரவிச்சந்திரன்,
   4–C. ஆகாஷ் இல்லம்,
   பாளையக்காடு,
   திருப்பூர் – 641 601.

2. ஆணையர்,
   திருப்பூர் மாநகராட்சி,
   திருப்பூர்.

3. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
   571, அண்ணாசாலை, நந்தனம்,
   சென்னை – 600035.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

5. இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்